## வேட்டவலம் பேரூர்

### 1–வது வார்டு

**அமைப்பாளர் :** வி.வினோத், 23, சிவன் கோயில் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) லோ.தமிழ் அரசன், 23, திருவள்ளுவர் நகர், வேட்டவலம், திருவண்ணாமலை. (2) ர.சூர்யா, 10–இ, பள்ளத்தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

### 2–வது வார்டு

**அமைப்பாளர் :** ஆ.மனேந்திரன், நடுத்திட்டு, வேட்டவலம், திருவண்ணாமலை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) செ.ஏழுமலை, நடுத்திட்டு, வேட்டவலம், திருவண்ணாமலை. (2) கு.ராஜ்குமார், நடுத்திட்டு, வேட்டவலம், திருவண்ணாமலை.

### 3–வது வார்டு

**அமைப்பாளர் :** (1) மு.பாஸ்கரன், 10–இ, அரண்மனை தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) வெ.விஸ்வநாதன், 44, விழுப்புரம் சாலை, வேட்டவலம், திருவண்ணாமலை. (2) பெ.பாரதி, 23, முருகன் கோயில் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

### 4–வது வார்டு

**அமைப்பாளர் :** ஆ.அன்பழகன், 77, அண்ணா தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) க.புவனேஷ்வரன், 7/1, அண்ணா தெரு, வேட்டவலம். (2) ஏ.சுரேஷ், 41, அண்ணா தெரு, வேட்டவலம்.

### 5–வது வார்டு

**அமைப்பாளர் :** வீ.கவின், தேரடி வீதி, வேட்டவலம், திருவண்ணாமலை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) க.தாமோதரன், 171, காந்தி தெரு, வேட்டவலம். (2) லூ.ஜான்பால், 108, மாதா கோயில் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

### 6–வது வார்டு

**அமைப்பாளர் :** மோ.விக்ரமன், 46/174–பி, அண்ணா நகர், வேட்டவலம், திருவண்ணாமலை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சே.மணிகண்டன், 46/183, அண்ணா நகர், வேட்டவலம், திருவண்ணாமலை. (2) வெ.ராஜேஷ், 47/188–இ, அண்ணா நகர், வேட்டவலம், திருவண்ணாமலை.

### 7–வது வார்டு

**அமைப்பாளர் :** பா.ஹரீஷ், 140, பெரியார் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) செ.பிரகாஷ், 43, பெரியார் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை. (2) கு.மனோகரன், 90, பெரியார் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

### 8–வது வார்டு

**அமைப்பாளர் :** சு.விக்னேஷ், 123/23, திருக்கோவிலூர் சாலை, வேட்டவலம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ச.கோபிகிருஷ்ணன், 67/29, அம்பேத்கர் தெரு, வேட்டவலம். (2) அ.சசிகுமார், 11, காமராஜர் தெரு, வேட்டவலம்.

### 9–வது வார்டு

**அமைப்பாளர் :** லூ.ஜான் பால், 108–பி, மாதா கோயில் தெரு, வேட்டவலம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.செல்வம், 18, செக்கு மேட்டுத் தெரு, வேட்டவலம். (2) ஏ.சுப்பிரமணி, 25/34, செக்கு மேட்டுத் தெரு, வேட்டவலம்.

### 10–வது வார்டு

**அமைப்பாளர் :** ஜோ.ஆண்டனி அஜித், 268, திருக்கோவிலூர் சாலை, வேட்டவலம், திருவண்ணாமலை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.விக்னேஷ், 4–சி–2, தர்மலிங்க நகர், வேட்டவலம், திருவண்ணாமலை. (2) ச.மார்டின், 276, திருக்கோவிலூர் சாலை, வேட்டவலம், திருவண்ணாமலை.

### 11–வது வார்டு

**அமைப்பாளர் :** ஜா.ஜோசப் அஜித், 131, மாதா கோயில் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) செ.வினோத்குமார், 13, மாதா கோயில் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை. (2) ஏ.சுரேஷ், 41, மாதா கோயில் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

### 12–வது வார்டு

**அமைப்பாளர் :** ப.அந்தோணி வினோத்குமார், 53/46, புனித அந்தோணியார் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) அ.ஆனந்த், 114, புனித அந்தோணியார் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை. (2) லூ.ராபின் ஜோசப், 54/40, புனித அந்தோணியார் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

### 13–வது வார்டு

**அமைப்பாளர் :** அ.ராஜ்குமார், 15/8, நடுத்தெரு, வேட்டவலம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ச.தமிழன், 95, நடுத்தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை. (2) க.சூர்யா, 11, நடுத்தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

### 14–வது வார்டு

**அமைப்பாளர் :** ஆ.பிரவீன்குமார், பாரதி தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) கு.புகழேந்தி, 103,பாரதி தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை. (2) அ.ஆஷாத், பாரதி தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

### 15–வது வார்டு

**அமைப்பாளர் :** அ.அருண்பாண்டியன், பாரதிதாசன் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஏ.சதீஷ், பாரதிதாசன் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை. (2) ப.கோகுலன், பாரதிதாசன் தெரு, வேட்டவலம், திருவண்ணாமலை.

**பாக அமைப்பாளர்கள் :**

பாகம் – 266 : மு.மணிகண்டன், 3257, தேரடி வீதி, வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

பாகம் – 267 : ஜெ,குணசீலன், 48, பள்ளத் தெரு, வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

பாகம் – 268 : கா.முருகன், 44/1, நடுத்திட்டு, வேட்டவலம், , கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

பாகம் – 269 : ப.தாமோதரன், 13/20, வ.உ.சி. தெரு, வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

பாகம் – 270 : வெ.விஜயகுமார், 18, செக்குமேட்டுத் தெரு, வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

பாகம் – 271 : மு.பிரகாஷ், 10, ஊரக்காலி மேட்டுத்தெரு, வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

பாகம் – 272 : வெ.ரோகித், 19/295, காந்தி சாலை, ஊரக்காலி மேட்டுத்தெரு, வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

பாகம் – 273 : பா.ஹரீஷ்குமார், 26/65, பெரியார் தெரு, வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

பாகம் – 274 : ச.செல்வமணி, 23/13, நேதாஜி தெரு, கருங்காலி குப்பம், சின்னக்கடை தெரு, வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

பாகம் – 275 : கு.ரீகன் ஜோசப், 268/1, திருக்கோவிலூர் சாலை, வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

பாகம் – 276 : சு.கமலக்கண்ணன், 16/10, நடுத்தெரு, வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

பாகம் – 277 : ஏ.கலைவாசல், 66/143, பாரதி தெரு, வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

பாகம் – 278 : த.சந்திரசேகர், 172, பாரதிதாசன் தெரு, வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

பாகம் – 279 : ஆ.ஜான் அபிநேஷ், அந்தோணியார் தெரு, வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

பாகம் – 280 : செ.வினோத், 53/13, மாதா கோயில் தெரு, வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை.

**அன்பகம்**
**சென்னை – 18**
**நாள் : 20–11–2025**

**உதயநிதி ஸ்டாலின்**
**செயலாளர்**
**தி.மு.க. இளைஞர் அணி**



### வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் - பொதுமக்கள் அனைவரும்

# வாக்குரிமையை நிலைநாட்ட விழிப்புணர்வுடன் செயலாற்ற வேண்டும்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் வலியுறுத்தல்!

*தூத்துக்குடி, நவ. 21-*

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதா ஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பாசிக பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக இருந்து செயல்பட்டு வரும் தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தலுக்கு சில மாதங்களே இருக்கும் நிலையில் தற்போது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை அமல்படுத்தியுள்ளது. அந்த சிறப்பு தீவிர திருத்தமானது கடந்த நவம்பர் 4 ஆம் தேதி தொடங்கி வருகின்ற டிசம்பர் 4 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. தேர்தல் ஆணைய அறிவிப்பின்படி அந்தந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஒவ்வொரு வாக்காளருக்கும் இரண்டு படிவங்கள் வீதம் வழங்கி வருகின்றனர்.

அந்தக் கணக்கீட்டு படிவங்களை நிரப்பும் முறை குறித்து பொதுமக்களிடையே பல்வேறு குழப்பங்கள் நிலவி வருகிறது. 2002 ஆம் ஆண்டு வாக்காளர் விபரங்களைத் தேடுவது அவர்களுக்கு மிகுந்த சிரமமாக உள்ளது. மேலும் மே மாதம் விடுமுறைக் காலத்தில் இந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை மேற்கொண்டிருந்தால்



அதில் ஈடுபட்டுள்ள அரசு அலுவலர்கள் ஆசிரியர்கள் மற்றும் அங்கன்வாடி ஊழியர்களுக்கும் போதிய கால அவகாசம் கிடைத்திருக்கும். தற்போது அவர்கள் தங்கள் வழக்கமான பணியை முடித்துவிட்டு, கணக்கீட்டு படிவங்களை வழங்கி திரும்பப் பெறும் பணிகளை செய்து வருகின்றனர்.

பொதுமக்கள் அனைவரும் முதலில் அந்தப் படிவங்களை கேட்டுப்பெற்று, அவற்றில் கேட்கப்பட்டுள்ள விபரங்களை கவனத்துடன் நிரப்பி வருகின்ற டிசம்பர் 4 ஆம் தேதிக்குள் அந்தந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்களிடமோ வழங்கலாம். அவ்வாறு திரும்ப வழங்கும் போது, நிரப்பிய இரண்டு படிவங்களில் ஒன்றை தங்களிடம் அத்தாட்சியாக வைத்துக் கொண்டு, மற்றொன்றை தேர்தல் அலுவலரிடம் வழங்க வேண்டும். டிசம்பர் 9ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் போது தங்கள் வாக்கு சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்து கொள்ள வேண்டும். வாக்கு சேர்க்கப்படாவிட்டால் மீண்டும் சேர்த்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

ஹிட்லர் பாணியில் மக்களிடையே பெரும் பதட்டத்தை பா.ஜ.க.வின் கைப்பாவையாக இருந்து செயல்படும் தேர்தல் ஆணையம் உருவாக்கியுள்ளது. பல்வேறு குழப்பங்கள், பதட்டங்களுக்கிடையே இந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் நடைபெறுவதால் பொது மக்களில் பெரும்பாலானோரின் வாக்குரிமை பறிபோகும் அபாய நிலை உள்ளது. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை தி.மு.க எதிர்த்தாலும், பொதுமக்களின் வாக்குரிமை பறிபோவதைத் தடுக்கும் ஜனநாயகக் கடமையை ஆற்றுவதில் தி.மு.க. உறுதியோடு இருக்கிறது.

ஆகவே தி.மு.க. தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுரையின்படி, தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தூத்துக்குடி, விளாத்திகுளம், கோவில்பட்டி ஆகிய 3 தொகுதிகளிலும் ஆங்காங்கே பொதுமக்களுக்கு உதவிடும்

வகையில் தன்னார்வலர்களைக் கொண்டு உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கிருக்கும் தன்னார்வலர்கள் வாக்காளர் கணக்கீட்டு படிவங்களை நிரப்புவதற்கும், வாக்காளர்களின் 2002 ஆம் ஆண்டு விபரங்களைத் தேடி எடுக்கவும் உதவுவார்கள். மேலும் தேர்தல் அலுவலரால் நாளை (22ஆம் தேதி சனிக்கிழமை) அன்று அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் அனைவரும் உதவி மையங்களையும், சிறப்பு முகாம்களையும் பயன்படுத்தி தங்கள் வாக்குரிமையை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். நிரப்பப்பட்ட வாக்காளர் படிவங்களை, அந்தந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடமும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குசாவடி முகவர்களிடமும் வழங்கலாம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ரூ. 4 கோடியில் திருப்பத்தூர் தொகுதி

# வடமாவளி கண்மாயில் தூர்வாரும் திட்டப் பணிகள்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

*சிவகங்கை, நவ.21-*

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி திருக்கோஷ்டியூர் அருகே வடமாவளி கண்மாய் உள்ளது. இப்பகுதியில் உள்ள கண்மாய்களில் இது பெரிய கண்மாய்ஆகும். இந்த கன்மாய் 16 ஆண்டுகளாக தூர்வாரப்படாமல் இருந்தது . இதனால். மழைநீர் சேமிக்க முடியாமல் வீணானது. இது குறித்து கரூவேல்குறிச்சி, வடமாவளி எம்.புதூர் மற்றும் சுற்றுப்புற கிராமமக்கள் வடமாவளி கண்மாய் வடிகாலை சீரமைத்தல் , மற்றும் அணைக்கட்டு கட்டித்தருமாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனிடம் கோரிக்கைமனு கொடுத்தார்கள்.

வடமாவளி கிராம மக்கள் கோரிக்கையினை நிறைவேற்றி தருமாறு தமிழக முதல்வர் தளபதி நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் ஆகியோரை நேரில் சந்தித்து வலியுறுத்தினார். அமைச்சரின் கோரிக்கையினை ஏற்று ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் வடமலாவளி அணைக்கட்டு பகுதியில் தூர்வாரி கால்வாய் சுத்தம் செய்திடவும், அணைக்கட்டு கட்டவும் நிதி ஒதுக்கப்பட்டது . இந்த திட்டப்பணிகளை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேற்று முன்தினம் காலை துவக்கி வைத்தார்.பணியினை தரமாகவும், விரைவாக செய்து முடிக்குமாறு அறிவுரை கூறினார் .

இந்த நிகழ்ச்சியில் கண்காணிப்பு பொறியாளர் அண்ணாதுரை முன்னாள் ஒன்றிய குழு தலைவர் எஸ். சண்முகவடிவேல், ஒன்றிய செயலாளர் விராமதி மாணிக்கம், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ். ஏ.வல்லபாய், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் சுப. சண்முகநாதன் , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், துணை அமைப்பாளர் முகமது கனி , தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து ,அயலக அணி துணை அமைப்பாளர் சன் சீமான் சுப்பையா, ஒன்றிய துணை செயலாளர்எஸ். முத்துக்குமார், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சகாதேவன் ,மற்றும் கருவேல்குறிச்சி, வடமாவலி, எம்.புதூர், பகுதி மக்கள் விவசாயிகள் கலந்து கொண்டார்கள்.

### பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில்

# சுதந்திரப்போராட்ட வீரர் தியாகி வ.உ.சி. நினைவுதினம்!

### திருவுருவச் சிலைக்கு மு. அப்துல் வகாப் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை!

*நெல்லை, நவ.21-*

கப்பலோட்டிய தமிழன் செக்கிழுத்த செம்மல் சுதந்திர போராட்ட வீரர் தியாகி வ.உ.சிதம்பரனார் அவர்களின் 89 வது நினைவு தியாக நாளா 18.11.2025 அன்று நெல்லை பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில் உள்ள வ.உ. சிதம்பரனார் அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வு நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் தலைமையில் நெல்லை மாநகர மேற்கு பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன்,மாவட்ட அவை தலைவர் முருகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் ஏ.எல்.பி. தினேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன், மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாநிலமகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், பகுதி பொறுப்பாளர்கள் சுப்பிரமணியன், நமச்சிவாயம்,அன்டன்செல்லத்துரை, டாக்டர் சங்கர், துபாய் சாகுல், கோட்டூர் செய்யது, சாமுவேல்,சங்கர்,மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ், தர்மன்,கிரிஜாகுமார்,மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம்,பேரூர் செயலாளர் செல்வ பாபு,மண்டல தலைவர்கள் பிரான்சிஸ் (பாளை) மகேஷ்வரி (நெல்லை) கஜிதா இக்லாம்பாசிலா (மேலப்பாளையம்) பகுதி அவைத்தலைவர் உமா மகேஸ்வரன்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை, மாமன்ற உறுப்பினர் கள் பேச்சியம்மாள்,சகாய ஜூலியட், சுப்பு லெட்சுமி, ராஜேஸ்வரி, சபி அமீர் பாத்து, கழக நிர்வாகிகள் பொன்னையா பாண்டியன்,பேபி கோபால்,கிங் பாலா, நாதன்,அலி சேக் மன்சூர்,வேங்கை வெங்கடேஷ், சுரேஷ்குமார், வல்லநாடு முத்து, அருள்வின் ரொட்ரிகோ,ரேமண்ட்,

பினிக்ஸ் ஆண்டனி,டாக்டர் ரவி, பெப்சி சரவணன்,மகாராஜன், கிருஷ்ண குமார்,மைக் மணி, மூர்த்தி,மைதீன்,வேல் ஆறுமுகம், செல்வா,தொப்பி மைதீன், மணிகண்டன்,சங்கர்,கார்த்திக், வேலாயுதம்,இசக்கி அய்யப்பன், செல்வ பெருமாள்,கண்ணன் மகளிர் அணி அனிதா, சௌந்திரம், ராஜேஸ்வரி,மேரி, சத்தியவாணி முத்து, பவானி,ஜோதிபிரியா,அருணாதேவிகா,ஏஞ்சலின் மற்றும் கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு சட்டமன்றத் தொகுதி திமிரி மத்திய ஒன்றியம் தாமரைப்பாக்கம் பகுதியில் பி.எல்.ஓ.க் களிடம் படிவம் பூர்த்தி செய்வது தொடர்பாக மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல்.ஈஸ்வரப்பன் ஆய்வு மேற்கொண்டார். உடன் மத்திய ஒன்றிய செயலாளர் கீழ் பாடி ரமேஷ், தொகுதி பொறுப்பாளர் மருது கணேஷ் ஒன்றிய அவைத் தலைவர் நா.குமார் மற்றும் பி .எல் .எ 2 நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி ஒடுக்கத்தூர் பேரூராட்சியில் சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒடுக்கத்தூர் To நேமந்தபுரம் அத்திகுப்பம் ஆகிய கிராமத்தை இணைக்கும் உயர்மட்ட மேம்பாலம் கட்டும் பணியை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, பேரூராட்சி செயலாளர் பெருமாள் ராஜா மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் என்.பிரகாஷ் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.